# பிரதமரின் இஸ்ரேலுக்கான வருகை (ஜூலை 4-6, 2017)

**ஜூன் 28, 2017**

1. பிரதமர் நரேந்திர மோடி, இஸ்ரேலின் பிரதமரான பெஞ்சமின் நேடன்யாகு அவர்களின் அழைப்பின் பேரில் ஜூலை 4 முதல் 6, 2017 வரை இஸ்ரேலிற்கு பயணம் செய்ய உள்ளார்.இது இஸ்ரேலுக்கு ஒரு இந்திய பிரதம மந்திரியின் முதல் வருகையாக இருக்கும்.
2. பிரதமர் இஸ்ரேல் பிரதம மந்திரி நேடன்யாகுவுடன் பரஸ்பர நலன் தொடர்பான விவகாரங்கள் குறித்து விவாதிக்க உள்ளதுடன், ஜனாதிபதி ரிவ்லின் அவர்களுக்கும் அழைப்பு விடுக்க உள்ளார். ஹைஃபாவில் உள்ள இந்திய கல்லறையில் இந்திய வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதும், டெல் அவீவ் நிகழ்ச்சியில் இந்திய சமூகத்திற்கு உரையாடுவதும் அவரது நிகழ்ச்சி நிரல் கூறுகளுள் அடங்கும்.
3. இந்தியா 1992-ல் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியதுடன்,அதன் பின்னர் இந்த உறவு பல பரிமாண கூட்டுகளாக உருவாகியுள்ளது. இந்த ஆண்டு இரு நாடுகளும் இராஜதந்திர உறவுகள் நிறுவி 25 ஆண்டுகளை நினைவுகூறுவதுடன் பிரதமரின் இந்த பயணம், பரஸ்பர நலன் சார்ந்தவைகளில், ஆழ்ந்த இருதரப்பு ஈடுபாடுகளுக்காக ஒரு உத்வேகத்தை வழங்கும்.

**புது டில்லி,**
**ஜூன் 28,2017**